முருகப்பெருமான் துணை

**மகான் புண்ணாக்கீசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.08.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞானிகளை உலகெலாம் படைக்க
   ஞானிகள் பூசைதனை துவக்கி
   ஞானிகளை வணங்கும் வகை செய்து
   ஞானமருளும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது நள்ளி திங்கள்
   வரங்களென மூவேழுதிகதி கதிர்வாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 21 ம் நாள், 06.08.2023, ஞாயிற்றுக்கிழமை)
   வல்லமைபட அறிவுரை ஆசி தன்னை
3. தன்னையே புண்ணாக்கீசர் யானும்
   தரணியே நலம்பெற உரைப்பேன்
   அண்ணல் அரங்கன் உபதேசம்
   அறம் தரும் வேதமாக இருக்க
4. இருக்கவே உலக மக்களெல்லாம்
   ஏழாம்படைவீடு நோக்கி வந்து
   கருத்தாக தீட்சைதனை ஏற்று
   கட்டளையாக மக்கள் பின்பற்றிவர
5. வருகவே நல்லொழுக்கம் கூடி
   வள்ளல் தன்மையாக தருமமும்
   பெருகி தருமவான்களாக உலகோர்
   பேராற்றல் கண்டு சிறப்பர்
6. சிறப்பறிவு தரும் முருகப்பெருமான்
   சித்திமிகு சரவண ஜோதி வழிபாட்டை
   மறுப்பின்றி மக்கள் செய்து வர
   மகத்துவம் நாளுக்கு நாள் கூடி

7. கூடியே ஆறுமுகனார் ஆசிபட
குருவருளே திருவருளாக மாறி
நாடிவரும் மக்களெல்லோருமே
ஞானிகளாக சக்தி பெறுவர்
8. சக்திபெற அரங்கன் நோக்கமான
சன்மார்க்கமும் தருமமும் பரவிட
சக்தி கூடி கலியுக மக்கள்
சகலரும் சமம் எனம் நிலை கூடி
9. கூடியே சாதி மத இன பேத
குறையான கேடுகள் அனைத்தும்
ஓடியே உலகம் தூய்மை கண்டு
உண்மையான ஞானமிக்கவர்கள் ஆளும்
10. ஆளும் ஞான பூமியாக மாற்றம்
அகிலம் கண்டு ஞான ஆட்சி
வேலவன் தலைமை கொண்ட
வெற்றி நிறைந்த ஆட்சிக் காலமாக
11. காலமாக உலகம் தேறியே
கலியுகம் ஞானயுகம் ஆகும்
வேலவன் ஆளுமையாக மாறும்
வினவிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–